## சல்லிக்கட்டிற்கான நிரந்தர தடையை நீக்கி கோரி அறவழியில் போராடிவந்த மாணவர்கள், பொது மக்கள் மீது போலீஸ் கொடூர தாக்குதல்

# முதல்கட்ட கள ஆய்வு அறிக்கை

தமிழகத்தில் பாரம்பரியமாக நடத்திவந்த சல்லிக்கட்டு போட்டியை கடந்த இரண்டு வருடங்களாக நீதிமன்றம் மூலமாக தடைசெய்யப்பட்டு வந்த நிலையில், தமிழகம் முழுவதும் மாணவர்கள் தன்னெழுச்சியாக எழுந்து 16.01.2017 தேதி முதல் 23.01.2017 வரை அறவழியில் போராடி வந்த நிலையில் மதுரை செல்லூர் பகுதியிலும் மாணவர்கள் 19.01.2017 முதல் இரயில் மறியல் போராட்டம் நடத்தி வந்தனர். இந்நிலையில் 23.01.2017 அன்று போலீசார் அறவழியி1 போராடி வந்த மாணவர்கள், மற்றும் பெண்கள் பொதுமக்கள், சிறுவர்கள் அனைவர் மீதும் கொடூர தாக்குதல் செய்ததாக பத்திரிக்கை, தொலைக்காட்சிகளில் வந்த தகவலின் அடிப்படையில், மக்கள் கண்காணிப்பகம் சார்பில் கள ஆய்வுக் குழு அமைக்கப்பட்டு 24.01.2017 அன்று சம்பவ இடத்திற்கு சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து கள ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.

## சம்பவம் தொடர்பான தகவல்கள்

### கள ஆய்வு செய்யும் பிரிவுகள்

| | | |
|---|---|---|
| சம்பவ நாள் | : | 23.01.2017 |
| காவல் நிலையம் | : | செல்லூர் |
| காவல் ஆய்வாளர் | : | திரு. அய்யாத்துரை |
| காவல் இணை ஆணையர் | : | மோகன் |
| மாநகர காவல் ஆணையர் | : | சைலேஸ் குமார் யாதவ் |
| மாவட்ட ஆட்சித் தலைவர் | : | வீர ராகவராவ் |
| மாவட்ட தலைமை நீதிமன்றம் | : | மதுரை |
| மாவட்ட தலைமை மருத்துவமனை | : | ராஜாஜி மருத்துவமனை |
| சட்ட மன்ற உறுப்பினர் | : | திரு. செல்லூர் ராஜீ |
| நாடாளுமன்ற உறுப்பினர் | : | |
| மதுரை மாநகர மேயர் | : | திரு. ராஜன் செல்லப்பா |

## கள ஆய்வுக் குழுவினர்கள்:

| வ.எண் | கள ஆய்வில் பங்கேற்றவர்கள் | தொலைபேசி எண் |
|---|---|---|
| 1. | திரு. ஆசிர்வாதம் | 99943 68571 |
| 2. | திரு. கணேசன் | 9994368503 |
| 3. | திரு. சொக்கு | 99943 68534 |
| 4. | வழக்கறிஞர். நாகேந்திரன் | 99943 68527 |
| 5. | திரு. பழனிசாமி | 85259 79122 |
| 6. | திரு. பெருமாள் | 99943 68559 |
| 7. | செல்வி. சிந்தியா ரெசல் | 73392 82999 |
| 8. | செல்வி. தீபிகா | 73392 85999 |

## வாக்குமூலம் பெறப்பட்டவர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. இந்திரா காந்தி | |
| 2. | திருமதி.சித்ரா, க/பெ தங்கராஜ் | 90470 52649 |
| 3. | திரு. சண்முகம் ஆட்டோ ஓட்டுனர் | |
| 4. | திரு.பாண்டி, த/பெ கார்த்திக் | |
| 5. | திரு.ஐயங்காளை த/பெ ஹரி | |
| 6. | திரு. நாகேந்திரன், த/பெ ராதாகிருஷ்ணன் | |
| 7. | திரு. மாரிமுத்து, | 95147 61186 |
| 8. | திரு. அஜித்குமார், த/பெ சசிக்குமார் | |
| 9. | திருமதி. குருவம்மாள் | |
| 10. | திரு. செல்வம் | |
| 11. | திரு. மாரிமணவாளன் | 97876 65328 |
| 12. | திரு. அழகர், த/பெ ராமன் | |
| 13. | திரு. வேலாயுதம், த/பெ சுந்தரம் | 99434 17558 |
| 14. | திரு. முகிலன்,த/பெ தங்கசாமி | |

## சம்பவச்சுருக்கம்

தமிழகத்தின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாக சல்லிக்கட்டு சமீபகாலமாக அனுசரிக்கப்பட்டு வந்தது. இந்த விளையாட்டில் காளைகள் துன்புறுத்தப்படுவதாக விலங்குகள் நலவாரியமும், PETAஎன்கிற அமைப்பும் உரிய ஆவணங்களோடு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தடைபெற்றது. கடந்த 3 வருடங்களாக தமிழகத்தில் சல்லிக்கட்டு நடத்தப்படவில்லை.தமிழகத்தின் முதலமைச்சரும் ஆளும்கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களும் இந்த ஆண்டு (2017) கண்டிப்பாக சல்லிக்கட்டு நடத்தப்படும் என்ற உத்திரவாதத்தை தொடர்ந்து அளித்து வந்தனர். கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் சல்லிக்கட்டு நடத்த முடியாது என்ற சூழல் உருவான நிலையில் தமிழகத்தில் மாணவர்கள் தன்னெழுச்சியாக எழுந்து அனைத்து மாவட்டங்களிலும் சல்லிக்கட்டு நடத்த அனுமதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

கடந்த 16.1.2017அன்று முதல் இந்த அறவழிப்போராட்டம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றது. இதில்மாணாக்கர்கள், பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் என பலதரப்பட்டவர்களின் பங்களிப்பும் இருந்தது. குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர், தமுக்கம் மைதானம், சென்னையில் மெரினா கடற்கரை, கோவையில் வ.உ.சி பூங்கா என தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் போராட்டம் வலுப்பெற்றது. தினந்தோறும் இப்போராட்டத்தில் 25 லட்சம் முதல் 50 லட்சம் வரையிலான மக்கள் பங்கேற்றனர் எனவும் செய்திகளில் சொல்லப்பட்டது.

இந்த அறவழிப் போராட்டத்தில், சல்லிக்கட்டு போட்டிக்கான நிரந்தர சட்டம் இயற்றுதல், PETA அமைப்பிற்கு தடை விதித்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

அறவழிப் போராட்டத்தின் அழுத்தம் காரணமாக கடந்த 21.1.2017 அன்று தமிழக அரசால், மத்திய அரசு மற்றும் ஜனாதிபதி அவர்களின் அனுமதி பெற்று சல்லிக்கட்டு நடத்துவதற்கான அவசர சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் போராட்டக்காரர்கள் போராட்டத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது. ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அவசரச் சட்டம் வேண்டாம் எங்களுக்கு நிரந்தர சட்டம் வேண்டும் வேண்டும் என்று போராட்டத்தை தொடர்ந்தனர்.

இந்நிலையில் கடந்த 23.1.2017 அன்று அதிகாலை முதல் அறவழிப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைக்கும் முயற்சிகளில் தமிழக காவல்துறை ஈடுபட்டது. காலை சுமார் 10 மணியளவில்

அலங்காநல்லூர் கிராமத்தில் போராடி வந்த மாணவர்கள் பொதுமக்கள் சுமார் 1000 நபர்களை போலீசார் தாக்குதல் செய்து விரட்டியத்துள்ளனர். மேலும் சிலரை கைது செய்துள்ளனர், இதில் சமூக ஆர்வாளர் முகிலன் என்பவரை தனிமைப்படுத்தி அலங்கநல்லூர் ஆய்வளார் அன்னராஜ் தாக்குதல் செய்துள்ளார்.மேலும் ஒருபகுதியாக மதுரையில் செல்லூர் இரயில்வே மேம்பாலத்தில் கடந்த 19.1.2017 முதல் போராட்டக்காரர்களால் சிறைப்பிடிக்கப்பட்ட கோவை-நாகர்கோவில் ரயிலை மீட்கும் முயற்சியில் காவல்துறை ஈடுபட்டது.

அப்போது பாலத்தில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்களில் ஒரு பகுதியினரை காவல்துறையினர் உள்ளூர் பகுதி வாசிகள் மூலம் நடத்தி பேச்சுவார்த்தை கீழே இறக்கி பின்னர் அவர்கள்மீது தடியடி நடத்தியுள்ளனர். மீதமுள்ள நபர்கள்மீது இரயில் தண்டவாளத்தில் உள்ள கருங்கற்களால் தாக்கியுள்ளனர். அங்கிருந்த வாகனங்கள் உள்ளிட்ட பொருட்களை சேதப்படுத்தியுள்ளனர். அறவழியில் நடந்த போராட்டத்தை கலைப்பதற்கு காவல்துறை தடியடி, கல்வீச்சு, பொருட்கள் சேதம் உள்ளிட்ட வழிமுறைகளை பயன்படுத்தியுள்ளதாக தொலைக்காட்சி செய்திகள், பத்திரிக்கைகள் வாயிலாக அறிந்து இந்த சம்பவம் குறித்த கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## வாக்குமூலங்கள்

### 1. இந்திரா காந்தியின் அவர்களின் வாக்குமூலம்

இந்திரா காந்தி(35/17). ஆகிய நான் மதுரை செல்லூர் பகுதியில் கல்சந்து, இராமானுஜபுரத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். கடந்த 19.01.2017முதல் செல்லூர் இரயில்வே பாலத்தில் நடைபெற்று வநத சல்லிக்கட்டு மறியல் போராட்டத்தில் நானும் எங்கள் பகுதியை சேர்ந்த பலரும் கலந்து கொண்டோம். கோவையில் இருந்து நாகர்கோவில் சென்று கொண்டிருந்த இரயிலை மாணவர்கள் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். மதுரையின் அடையாளமான சல்லிக்கட்டு அழிந்து விடக் கூடாது என்பதற்காக நாங்களும் அந்த போராட்டத்தில் மாணவர்களுக்கு ஆதரவாக கலந்து கொண்டோம். கடந்த ஐந்து நாட்களும் எந்த அமைச்சரும் வந்து எங்கள் கோரிக்கைகளை கேட்கவில்லை. ஆனால் நூற்றுக்கணக்கான போலீசார் மட்டும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

23.01.2017 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் ஆயிரக்கணக்கில் போலீசார் வண்டியில் வந்து இறங்கினார்கள். இவர்களோடு கூட டிஐஜி மற்றும் எஸ்.பி யும் வந்திருந்தார்கள். பாலத்திற்கு கீழே நின்ற போராட்டக்காரார்களை நோக்கி போலீசார் கற்களை வீசியும், லத்தியால் அடித்து விரட்டினார். பதிலுக்கு போராட்டகாரர்களும் கற்களை வீசினார்கள். ஆனால் முதலில் வன்முறையில் ஈடுபட்டது போலீசார் தான். இதையடுத்து பாலத்தில் இரயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீசார் அடிக்க முற்பட்ட போது போராட்டகாரர்கள் ‘‘எங்கள் அடித்து அப்புறபடுத்த முற்பட்டால் பாலத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்துவிடுவோம் என்று கூறினார்கள்.உடனே போலீசார் கற்களை வீசுவதை விட்டு விட்டு மாணவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த முயன்றனர். அங்கிருந்த என்னையும், எங்கள் பகுதியில் இருந்த பத்து பெண்களையும் மதுரை அழைத்து DIG உங்கள் மாணவர்களிடம் பண்பாக பேசி பாலத்தை விட்டு மட்டும் கிழே இறங்க சொல்லுங்கள் என்று DIG அவர்கள் எங்களிடம் கூறினார். அப்போது பல அதிகாரிகள் உடன் இருந்தனர் அவர்களில் ரஜினி என்ற காவல் என்ற காவல் அலுவலரும் இருந்தார். தாழ்மையாக கேட்டு கொண்டார். மேலும் இரயிலை மறித்து போராட்டத்தில் உள்ளவர்களை வீடியோ மூலம் பதிவு செய்துள்ளோம். போராட்டத்தில் ஈடுபட்ட அனைவர் மீதும் வழக்கு பதிவு செய்துவிடுவோம். இதற்கு கோடி கணக்கில் செலவு செய்தால் தான் அவர்களால் வெளியே வர முடியும் என்று போராட்டகாரர்களிடம் சொல்லி அவர்களை பாலத்தை விட்டு கிழே இறங்க வைத்து விடுங்கள் என்று சொன்னர்கள். நாங்களும் மாணவர்களிடமும், போலீசாரிடம் மாறி மாறி சமாதாம் பேசி ஒரு வழியாக போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் பாலத்தில் இருந்து கீழே இறங்கி வந்தார்கள். உடனே ஆயிரகணக்கான போலீசார் கிழே இறங்கி வந்த இளைஞர்களையும் மற்ற போராட்டகாரர்களையும், இரயில் தண்டவளத்தில் இருந்த கற்களை வீசியும் லத்தியால் அடித்து விரட்ட ஆரம்பித்தர்கள். குழந்தைகள், மாணவர்கள் என்று கூட பார்க்காமல் போலீசார் வெறித்தனமாக லத்தியால் அடித்து விரட்ட ஆரம்பித்தார்கள். போராட்டத்தில் ஈடுப்பட்டிருந்த என் அக்கா குருவம்மாவை போலீசார் லத்தியால் பெண் என்று கூட பாராமல் அடித்து காயபடுத்தியுள்ளனர்.

பாலத்திற்கு அருகில் உள்ள எங்கள் வீடுகளை நோக்கி போலீசார் இரயில்வே தண்டவாளத்தில் உள்ள கற்களை எடுத்து வீசினார்கள். மேலும் ஐம்பத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் டுவிலர் வண்டியை மூன்று போலீஸ் லாரியில் காவல்துறையின5 ஏற்றிக் கொண்டு சென்றார்கள். மீதியுள்ள வாகனங்களை கற்களை வீசியும் லத்தியால் அடித்தும் போலீசார் சேதப்படுத்தினார்கள்.வீடுகளின் மீது

கற்களை வீசியதில் பலருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. ‘‘கல் மழை பெய்தால் எப்படி இருக்குமோ அப்படி போலீசார் கற்களை வீசினார்கள்’’ கடந்த ஐந்து நாளும் நாங்களும் மாணவர்களும் இணைந்து அமைதியாகதான் போராட்டம் நடத்தி வந்தோம். ஆனால் போலீசார் வன்முறை செய்துவிட்டு மாணவர்களை குற்றபடுத்துகின்றனர்.போராட்டக்காரர்களை மட்டுமில்லாமல் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தவர்கள் அனைவரையும் லத்தியால் துரத்தி சென்று அடித்து விரட்டினார்கள். காயப்பட்ட பலர் தனியார் மருத்துவமயைில் சிகிச்சை எடுத்துக் கொண்டனர். பல பேரை போலீஸ்காரர்கள் பிடித்துக் கொண்டு கீழே இறங்கய பிறகு அவர்களை விரட்டி விரட்டி அடித்தது அறியாயம். இந்த பகுதியில் உள்ள பொது மக்கள் தான் தினமும் அவர்கள் வீட்டில் சமையல் செய்து போராடும் மாணவர்களுக்கு 19.01.2017 முதல் கொடுத்து வந்தார்கள். ஆதரவு கொடுத்த மக்களை வைத்தே மாணவர்களை ஏமாற்ற வைத்து தந்திரமாக கீழே இறக்கி கொடூரமாக தாக்கிவிட்டனர் என்றார் கோபத்துடன்.

## 2. சித்ரா, க/பெ தங்கராஜ் அவர்களின் வாக்குமூலம்:

எனது பெயர் சித்ரா (30) க.பெ தங்கராஜ். நான் மேலத்தோப்பு, மதுரை என்ற முகவரியில் எனது குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகின்றேன். சல்லிக்கட்டிற்கு ஆதரவாக மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் நானும் குடும்பத்தோடு பங்கேற்பு செய்தேன். மதுரை தத்தனேரி பாலத்தில் ஏழுநாட்களாக நடந்த ரயில் மறியல் போராட்டத்தின் போது எவ்விதமான வன்முறையும் நடைபெறவில்லை. தினமும் எனது வீட்டில் சாப்பாடு செய்து அறவழியில் போராடும் மாணவர்களுக்கு உணவு கொடுத்தேன். என்னைப்போல் பல பெண்கள், மாணவர்களுக்கு தினந்தோறும் 6உணவு வழங்கினார்கள்.

பல ஊரினைச் சேர்ந்த மாணவர்கள் போராட்டத்தில் பங்கேற்பு செய்தனர். குறிப்பாக மாணவிகள் அதிகமானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இரவு முழுவதும் அனைவரும் ரயிலுக்கு முன்பு இருந்த இரும்புப் பாதையில், மழை, குளிர் வெயில் அனைத்தையும் தாங்கிக்கொண்டு நமமது பாரம்பரிய கலாச்சார உரிமைக்காக போராடினார்கள். வெளியூரில் இருந்து வந்திருந்த மாணவிகளை உள்ளூர் மாணவிகள் அதிகாலை நேரத்தில் தங்களது வீடுகளுக்கு அழைத்துச் சென்று குளிப்பதற்கு உடைமாற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்து உதவினர். இப்படி கடந்த ஒருவார காலமாக சாதி, மதம் வேறுபாடுகளை கடந்த அனைவரும் தமிழர் என்ற உணர்வில் அமைதியான முறையில் போராடி வந்தோம்.

22.1.2017 ஞாயிற்றுக்கிழமை இரவிலே யூனிபார்ம் போடாத சில போலீஸ்காரர்கள் போராட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என மாணவர்களிடம் வந்து பேசினார்கள். ஆனால் நிரந்தர சட்டம் வரும்வரை போராடுவோம் என மாணவர்கள் உறுதியாக இருந்தனர். சுமார் 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

23.1.2017 திங்கள் கிழமை அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவர்களிடம் போலீசார், மறிக்கப்பட்டிருந்த ரயிலுக்கு முன்பாக பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தபோது தத்தனேரி பாலத்தின் மீது நின்றுகொண்டிருந்த செல்லூர் காவல் உதவி ஆய்வாளர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் மீது கற்களை சரமரிகயாக எறிந்தார். இதனை தொடர்ந்து போலீசார் லத்தியால் அனைவரையும் அடித்து விரட்ட ஆரம்பித்தனர். குடியிருக்கும் தெருபகுதிக்குள் நுழைந்து விரட்டி விரட்டி அடித்தார்கள். தத்தனேரி பாலம் கீழே அமைந்த வீடுகள் மீதெல்லாம் போலீசார் கல் எறிந்து சேதப்படுத்தினார்கள். பெண்களை பார்த்தெல்லாம் தேவிடியா, அவுசாரி என மோசமாகத் திட்டினார்கள். எங்கள் பகுதியில் உள்ள ஆண் பிள்ளைகள் யார் கிடைத்தாலும் அவர்களை செல்லூர் காவல் நிலைய காவலர்கள் அடித்து பொய் கேஸ் போட்டு சிறைக்கு அனுப்பும் செயலையே தொடர்ச்சியாக செய்து வந்ததா7 நாங்கள். பயந்து கொண்டு என் மகனை முன்பே வெளியூருக்கு அனுப்பிவிட்டோம். அதனா7 இந்த பிரச்சனையில் அவனுக்கு பாதிப்பில்லை. ஆனால் எங்கள் பகுதியில் உள்ள பல இளவட்ட பசங்களை போலீசார் தேடி வருகிறார்கள். எதிரி நாட்டு மக்களை ராணுவம் அடிப்பது போல போலீசார் எங்களை சித்திரவதை செய்து வருகின்றார்கள். இதனால் பயந்தே வாழவேண்டிய சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றோம் என்றார்.

### 3. சண்முகம், ஆட்டோ ஓட்டுனர் அவர்களின் வாக்குமூலம்:

என் பெயர் சண்முகம், த/பெ ரத்தினபாண்டியன், பாக்கியனாதபுரம், செல்லூர், மதுரையில் வசிக்கின்றேன். நான் TN 58 V 6837என்ற ஆட்டோவின் ஓட்டுனராக இருந்து பிழைப்பு நடத்துகின்றேன். மதுரை செல்லூர் பகுதியில் 23.01.2017 அன்று லத்திசார்ஜ் நடந்தது நான் செல்லூர் LIC அலுவலகத்திற்கு மேலே உள்ள பாலத்தில் இருந்து நேரில் நடந்த சம்பவத்தை பார்த்தேன். மேலும் எனது செல் போன் மூலமாக வீடியோ படமும் பிடித்தேன். அதன் படி உண்மையில் நான் நேரில் பார்த்த சம்பவத்தை தங்களிடம் கூறுகின்றேன். கடந்த 23.01.2017 அன்று திங்கள் கிழமை மாலை

சுமார் 5.30 மணி இருக்கும் அப்போது போலீசார் செல்லூர் இரயில்வே பாலத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை கலைந்து செல்லும்படி கூறினார்கள்.அதே சமயம் பாலத்திற்கு கீழே வைகை ஆற்றுக்குள் செல்லும்படி சைகை காட்டினார்கள். அப்போது பாலத்திற்கு கீழே வைகை ஆற்றுக்குள் வேடிக்கை பார்தத பெரியோர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரை போலீசார் தன் கைகயில் வைத்திருந்த பெரிய லத்தியால் விரட்டியத்தனர். இதனால் பல குழந்தைகளும் பெரியயோர்களும் போலீசாரிடம் அடிவாங்கி அங்கிருந்து தப்பி ஓடும் போது தடுமாறி கீழே விழுந்தனர். அப்போது கீழே விழுந்தவர்களை பல காவலர்கள் சேர்ந்து கொண்டு சுற்றிவளைத்து மீண்டும் மீண்டும் பெரிய லத்திக்கம்பால் அடித்து மயக்கமடையும் அளவிற்கு அடித்தே விரட்டினார்கள். வேடிக்கை பார்த்த பலர் எனக்கு அடையாளம் தெரியாத நபர்கள் போலீசார்தான் போராடிய மாணவர்கள் மற்றும் பகுதிவாசிகளை லத்தியால் அடித்து கற்களை கொண்டு எரிந்தார்கள் என்பதை நான் மேலிருந்து முழுமையாகப் பார்த்தேன். நான் புதிய பாலத்தின் ங்களிடம் கூறியது போலீஸ்க்கு தெரிந்தால் என் மீது பொய்க் கேசு போட்டு உள்ளே தள்ளவிடுவார்கள். இந்த LIC அலுவலகத்திற்கு நேரே ஆற்றிற்குள் நின்றவர்களை வைகை ஆற்றின் வடக்குக் கரையில் உள்ள ரோட்டிற்கு விரட்டி அதன் பின் LIC அலுவலக வாயிலில் இருந்து கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய இருபுறங்களிலும் உள்ள ரோடு வழியாக சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு ஆள் நடமாட்டம் இல்லாதவாறு விரட்டி விரட்டி அடித்தனார். தடியடி முடிந்த பின்னர், அந்த காலி இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த சுமார் ஐம்பது இரு சக்கர வாகனங்களை மூன்று முறை போலீஸ் லாரி போன்ற வாகனத்தில் போலீசார் தூக்கிபோட்டு கொண்டு சென்றனர். இவற்றை நான் நேரில் பார்த்தேன்.

## 4. K.பாண்டி த/பெ. கார்த்திக் (11/17) அவர்களின் வாக்குமூலம்

எனது பெயர் மு.பாண்டி (11/17). நான் கதவு எண் 22, மேலகைலாசபுரம், பழனிபண்டிதர் தெரு, தத்தனேரி மெயின் ரோடு, மதுரை -18 என்ற முகவரியில் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். எனது தந்தை பெயர் கார்த்திக் (43/17) என்னுடைய அம்மா பெயர் முத்துலெட்சுமி (39/17). நான் வீரமாமுனிவர் நடுநிலைப்பள்ளியில் (பூந்தோட்டம்) 5ஆம் வகுப்பு படித்து கொண்டிருக்கிறேன். நான் இந்து நாடார் சமூகத்தை சேர்ந்தவன்.

நான் கடந்த 23.01.2017 அன்று காலை சுமார் 9 மணிக்கு பூந்தோட்டத்திலுள்ள வீரமாமுனிவர் நடுநிலைப்பள்ளிக்கு செல்ல வந்தேன்.நான் தினமும் மதுரை வைகை பாலம் வழியாக பள்ளிக்கு செல்வேன். அப்போது மதுரை வைகை பாலத்தில் இரண்டு பக்கமும் சுமார் 300க்கு

மேற்ப்பட்ட காவலர்கள் பாலத்தை அடைத்து வைத்து பாதுகாப்பு பணியில் இருந்தார்கள். பொது மக்கள், மாணவர்கள் யாரும் பாலம் வழியாக செல்ல கூடாது என்றும் வீட்டிற்கு சென்று விடுங்கள் என்று காவலர்கள் கூறினார்கள். நான் உடனே பயந்ரி போய் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

மதியம் சுமார் 3 மணிக்கு மேல் கிரிக்கெட் விளையாடுவதற்கு மதுரை வைகை பாலம் (துத்தனேரி) அடியில் நான், எனது நண்பர்கள் ஐசக் (12/17) மேலும் இரண்டு நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது மாலை சுமார் 5 மணிக்கு மேல் 3 காவலர்கள் ஓடி வந்து நாங்கள் விளையாடிக் கொண்டிருந்த பகுதியில் காவலர்கள் வைத்திருந்த லத்தியால் என்னை அடித்தார்கள். அப்போது நான் பள்ளி சீருடையில் இருந்தேன். என்னை அடிக்க வேண்டாம், அடிக்க வேண்டாம் என்று கூறினேன். என்னை காவலர்கள் அடிப்பதை பார்த்து என்னுடைய நண்பர்கள் ஓடி விட்டார்கள். ஆனால் காவலர்கள் என்னை தொடர்ந்து அடித்ததில் எனது இடது இடுப்பு பகுதியில் இரத்த காயங்கள் இருக்கிறது. அப்போது எனது தந்தை கார்த்திக் வந்து எனது மகனை அடிக்க வேண்டாம் என்று போலீசிடம் கெஞ்சி என்னை வீட்டிற்கு அழைத்து சென்று விட்டார்.

மேலும் காவலர்கள் லத்தியால் அடித்ததால் எனக்கு கடுமையான வலியும்,காய்ச்சலும் இரண்டு நாட்கள் இருந்தது. ஆனால் காவலர்களால் தடியடி மற்றும் கல்வீச்சு சம்பவங்கள் தொடர்ந்து நடந்ததால் எங்களால் எந்த மருத்துவமனைக்கும் உடனே செல்ல முடியவில்லை. இரவு 8 மணிக்கு மேல் சரவணா மருத்துவமனைக்கு எனது தந்தை அழைத்துச் சென்றார். காவலர்கள் அடித்ததை மருத்துவரிடம் கூறினேன். பின்னர் மருத்துவர் ஊசி போட்டு இரண்டு நாட்களுக்கான மாத்திரைகளும் ஆயில்மென்ட்களும் கொடுத்தார். ஆனால் தற்போது வரை எனக்கு வலி குணமாகவில்லை. என் மனம் பதட்டமாகவும் பயந்த நிலையிலுமே எப்போதும் இருக்கிறேன். என்னை காவலர்கள் அடித்ததற்கான சாட்சி தினகரன் பத்திரிகையில் 24.01.2017(மதுரை) செய்தி வந்துள்ளது.

25.01.2017 அன்று முதல் மதுரையுள்ள இராஜாஜி மருத்துவமனையில் சென்று வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறேன் என்று கூறினார்.

## 5. A.அய்யங்காளை த/பெ. ஹரி, அவர்களின் வாக்குமூலம்:

6/137 சாவடித்தெரு, கருப்பாயூரணி, மதுரை-20

நான் 6/137 சாவடித்தெரு, கருப்பாயூரணி, மதுரை-20 என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். டீக்கடை வைத்து பிழைப்பு நடத்தி வருகிறேன். 24.01.2017 அன்று இரவு சுமார் 10 மணி அளவில் வழக்கம் போல் கடையை அடைத்துவிட்டு நான் என் மனைவி, மகன், மகள் அனைவரும் வீட்டில்

படுத்து உறங்கி விட்டோம். நள்ளிரவு சுமார் 12.30 மணியளவில் கதவு தட்டும் சத்தம் கேட்டு விழித்து எழுந்து சென்று கதவைத் திறந்து பார்த்தேன். அங்கே இரண்டு நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். என்ன வேண்டும் என்ற கேட்டபோது நாங்கள் அண்ணாநகர் போலீஸ் என்று கூறினார்கள் வந்திருந்த இரண்டு காவலர்களை எனக்கு அடையாளம் தெரியும் ஆனால் பெயர் தெரியாது. உன் மகன் அபிஷேக் எங்கே என்று என்னிடம் கேட்டார்கள் நான் வீட்டினுள் உறங்குகிறான் என்றேன். வந்திருந்தஇருவரும் சீருடை அணியாமல் சாதாராண உடையில் இருந்தார்கள். உன் மகன் சல்லிக்கட்டு போராடத்தில் கலந்துக் கொண்டான். அதனால் அவனை விசாரிக்க வேண்டும் என்று கூறி உறங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பவைத்து வலுக்கட்டாயமாக அவர்கள் வந்த இரு சக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்று விட்டார்கள். காலை 10.00 மணிக்கு அண்ணாநகர் காவல் நிலையத்திற்கு சென்று விசாரித்தபோது ஸ்டேசனின் உள்ளே சுமார் 20 இளைஞர்கள் இருந்தார்கள். என் மகன் எங்கே என்று கேட்டபோது வீட்டுக்கு போய் அவன் படித்த பள்ளியின் சான்றிதழ்களை எடுத்துக் கொண்டு வா என்று கூறினார்கள். எனவே எனது மகன் அபிஷேக்கை சட்டத்துக்குப் புறம்பாக பிடித்துச் சென்ற அண்ணாநகர் காவல் நிலைய காவலர்கள் மேல் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்து என் மகனை அவர்களிடம் இருந்து மீட்டுத் தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று கூறினார்.

## 6. திரு.நாகேந்திரன், த/பெ. ராதாகிருஷ்ணன் (42/17) வாக்குமூலம்

நான் செல்லூர் பகுதியில் வசித்து வருகின்றேன். நான் தள்ளுவண்டி வைத்து கூலி வேலை செய்து வருகின்றேன். கடந்த 23.01.2017 அன்று மதுரை தத்தனேரி மேம்பாலத்தில் இருபுறமும் காவலர்கள் பாதுகாப்புக்கு இருந்தார்கள்.மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஜல்லிக்கட்டிற்காக போராட்டம் நடத்தி வந்தனர். இதை நான் காலையில் பார்த்துவிட்டு வந்தேன். இதனால் நான் வேலைக்காக தத்தனேரி மற்றும் பாலத்தின் மறுபகுதிக்கும் செல்லவில்லை. மேலும் செல்லூர் பகுதியிலேயே கூலி வேலை பார்த்துக் கொண்டு வந்தேன்.

மாலை சுமார் 5 மணிக்கு மேல் செல்லூர் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொது மக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை சுமார் 10க்கும் மேற்பட்ட காவலர்கள் கம்புகளை வைத்து அடித்துக் விரட்டிக் கொண்டே வந்தார்கள். அப்போது நான், என்னுடைய தள்ளுவண்டி அருகே இருந்தபோது என்னையும் சுமார் 7 காவலர்கள், சுற்றி நின்று கொண்டு கை, கால் மற்றும் முதுகில் அடித்தார்கள். இதனால் எனக்கு வீக்கம் ஏற்பட்டது. அடிப்பட்ட இடங்களில் தலைவலி மருந்தை

வைத்து தடவிக்கொண்டேன். காவலர்கள் மீது என்னால் புகார் கொடுக்க முடியாது. நான் கூலி வேலை வருவதால் என்னால் புகார் கொடுக்க முடியாது. அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை எடுக்க விரும்பவில்லை. இதனால் பின்பு காவலர்களால் எனக்கு பாதிப்பு வரும் என்று கூறினார்.

## 7. மாரி முத்து அவர்களின் வாக்குமூலம்:

மாரி முத்துவாகிய நான் கல்லுசந்து இராமானுஜபுரத்தில் வசித்து வருகிறேன். தள்ளு வண்டியில் காய்கறிகளை விற்று வியாபாரம் செய்து வருகிறேன்.

கடந்த 19.01.2017 முதல் செல்லூர் ரயில்வே தண்டவளத்தில் (பாலத்தில்) நடைபெற்ற சல்லிககட்டுக்கு ஆதரவாக மாணவர்கள் நடத்திய இரயில் மறியல் போராட்டத்தில் பங்கு பெற்று வந்தேன். சுமார் 8,000 திற்கு மேற்பட்ட மாணவர்கள், பொதுமக்கள் வெவ்வேறு இடங்களிலிருந்த இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். தமிழர்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் அழிந்து விட கூடாது என்ற ஒரே காரணத்தினால் மட்டும் நாங்கள் இதில் பங்கு பெற்றோம். கடந்த ஐந்து நாட்களாக மாணவர்களும் மற்ற ஜனங்களும் அமைதியான முறையில் மட்டுமே போராட்டத்தை நடத்தி வந்தனர்.மேலும் ஐந்து நாட்களும் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் இங்கு பாதுகாப்பு பணியில் ஈடுப்பட்டிருந்தனர்.

23.01.2017 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் ஆயிரக்கணக்கில் போலீசார் வண்டியில் வந்து இறங்கினார்கள். இரயில்வே பாலத்திற்கு கீழே நின்று போராட்டகாரர்களையும், வேடிக்கை பார்க்க வந்தவர்களையும் போலீசார் லத்தியால் அடித்து வலுக்கட்டாயமாக அப்பகுதியில் இருந்து அப்புறப்படுத்தினார்கள். நானும் எங்கள் பகுதியை சேர்ந்த்த பெண்களும் வீட்டிற்கு வெளியே நின்று என்ன நடக்கிறது என்று பார்த்து கொண்டிருந்தோம். அப்போது போலீசார் இரயில்வே பாலத்தில் இருந்த கற்களை எடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நோக்கி சரமாரி வீசினார்கள். போலீசார் கற்களை வீசியதில் பல மாணவர்கள் காயமடைந்தார்கள். மேலும் பாலத்தின் இருபுறமும் போலீசார் இருந்தால் ஒடுவதற்கு வழி இல்லாமல் போராட்டகாரர்கள் திரும்பி வேறு வழியின்றி போலீசார் மேல் கற்களை வீசினார்கள் அதன்பின்னர் போலீசார் போராட்டகாரர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். ஆனால் நிரந்தர சட்டம் கொண்டு வரும் வரை போராட்டத்தை கைவிட மாட்டோம் என்று உறுதியாக மாணவர்கள் கூறினார்கள். சமாதனாக் குழுவினர் மூலம் போலீசார் தாழ்மையாக கெஞ்சி பாலத்தில் இருந்து அனைவரும் இறங்குமாறு கேட்டு கொண்டார்கள். சிறிது

நேரத்தில் செல்லூர் இரயில் பாலத்தை ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் சுற்றி வளைத்து கீழே இறங்கி வந்த போராட்டகாரர்களை லத்தியால் அடித்தும் கற்களை வீசியும் அதிரடி தாக்குதலில் ஈடுபட்டனர். எங்கள் வீடு பாலத்திற்கு பின் அருகில் இருப்பதால் மாடியில் நின்று போராட்டத்தை பார்த்து கொண்டிருந்தோம். பாலத்தின் கீழே போராட்டகாரர்களை அடித்து கொண்டிருந்த போலீசார் சிதறி ஓடியவர்களை துரத்தி சென்று லத்தியால் அடித்தனர். திடீரென்று சில போலீசார் கற்களை எடுத்து எங்கள் வீடுகளின் மேல் எறிய ஆரம்பித்தார்கள். போலீசார் கற்களை வீசியத்தில் மாடியில் நின்ற என் முதுகின் வலது புறத்தில் இரத்த காயம் ஏற்பட்டது. மேலும் போலீசார் கற்களை வீசியதில் பல குழந்தைகளும் பெண்களும் காயமடைந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை மாணவர்கள் என்று கூட பார்க்காமல் போலீசார் வெறித்தனமாக தாக்கினார்கள். பாலத்திற்கு கீழ் நின்ற வாகனங்களை போலீசார் கற்களை வீசியும், லத்தியால் அடித்தும் உடைத்தனர். மேலும் பாலத்திற்கு அருகில் இருந்த கடைகள் மீது கற்களை வீசி கடையை மூட சொன்னார்கள். இதுதான் எனக்கு தெரியும் என்று கூறினார்.

## 8. திரு. அஜித்குமார் (15/17) த/பெ சசிக்குமார் அவர்களின் வாக்குமூலம்:

மதுரை மாவட்டம் செல்லூர் பகுதியிலுள்ள விசாலம், ஐயன்சபுரம் 1வது தெருவில் வசித்து வரும் நான் 8-ம் வகுப்பு வரை ஜெயபிரகாஷ் பள்ளியில் படித்துவிட்டு இப்பொழுது பள்ளிக்கு செல்லாமல் இருந்து வருகிறேன். நான் கடந்த 23.01.2017 அன்று இரவு சுமார் 7.30 மணியளவில் எனது பெரியம்மா வீட்டிலிருந்து எங்க வீட்டிற்கு போய் கொண்டிருந்த போது எங்க வீடு இருக்கும் பகுதியில் இருக்கக்கூடிய ரோட்டில் நிறைய போலீஸ்காரர்கள் அந்த வழிய வருபவர்களையும், போய் கொண்டு இருந்தவர்களையும் லத்திக் கம்பைக் கொண்டு, அடித்தும் கற்களை வைத்து எறிந்து எல்லோரையும் விரட்டினார்கள். அந்த சமயத்தில் நானும் அந்த இடத்தில் இருந்து ஓடும் பொழுது போலீஸ்காரர்கள எறிந்த கல்லானது எனது வலது காலின் முழுங்காலுக்கு கீழே பாதம் பக்கத்தில் விழுந்து அடிப்பட்டது. ஆனால் எந்த போலீஸ்காரர் என்று எனக்கு அந்த கூட்டத்தில் தெரியவில்லை.நான் உடனே பயந்துக் கொண்டு எனது வீட்டிற்கு ஓடிவந்துவிட்டேன் என்றார்.

## 9. குருவம்மா அவர்களின் வாக்குமூலம்.

குருவம்மாவாகிய நான் கடந்த 19.01.2017 அன்று முதல் செல்லூர் இரயில்வே பாலத்தில் நடைபெற்ற ஜல்லிகட்டு ஆதரவு போராட்டத்தில் மாணவர்களுக்கு ஆதரவாக கலந்து கொண்டேன்.

என்னுடன் பல பெண்களும், மாணவர்களும் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தோம். ஐந்து நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு எங்கள் பகுதி மக்கள் தங்களால் முடிந்த உணவு வசதிகளை செய்து கொடுத்தனர். இந்த போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மழை, வெயில் என்று பாராமல் அமைதியான முறையில் சல்லிகட்டிற்காக தங்களை வறுத்திக் கொண்டு போராடினார்கள். நூற்றுக்கணக்கான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுப்பட்டிருந்தனர். அப்போது எந்த வன்முறையும் நடைபெறவில்லை.

23.01.2017 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் ஆயிரகணக்கில் போலீசார் வண்டியிலிருந்து இறங்கி பாலத்தை சுற்றி கீழே நின்று கொண்டு மாணவர்களை வேடிக்கை பார்த்த பொதுமக்களை லத்தியால் அடித்தும் கற்களை வீசியும் விரட்ட ஆரம்பித்தனர். அதன் பின்னர் பாலத்திற்கு இருபுறமும் போலீசார் போராட்டக்காரர்களை சுற்றி வளைத்தனர். இரயில்வே தண்டவாளத்தில் இருந்த கற்களை எங்கள் மீது போலீசார் சாரமாரியாக வீசினார்கள். அப்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்த என்னை ஒரு போலீசார் பூட்ஸ் காலால் என்னை மீதித்து கீழே தள்ளினார். மேலும் என்னை லத்தியால் அடித்து வலுகட்டாயமாக தண்டவாளத்தில் இழுத்ததால் என் உடம்பு முழுவதும் சிராய்ப்புக் காயம் ஏற்பட்டுள்ளது. என்னுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போராட்டகாரர்கள் மற்றும் இளைஞர்கள் மீது போலீசார் எங்களை அடித்து வலுக்கட்டயமாக அப்புறபடுத்தியதால் பாலத்தில் இருந்து கீழே குதித்து விடுவோம் என்று கூறி பாலத்தின் ஓரத்தில் மாணவர்கள் நின்றார்கள். உடனே போலீசார் தடியடியை நிறுத்திவிட்டு பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். எங்கள் பகுதியில் இருந்த சில பெண்களை அழைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர்களிடம் சமாதானம் பேசி பாலத்தை விட்டு மட்டும் கீழே இறங்க சொன்னார்கள். இந்த பேச்சு வார்த்தை குழுவில் எனது சகோதரி இந்திராகாந்தியும் கலந்து கொண்டார். அரை மணி நேரம் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் போராட்டத்தில் ஈடுபபட்டவர்கள் பாலத்தில் இருந்து கீழே இறங்க சம்மதித்து இரயிலை விட்டு விட்டு கீழே இறங்கினார்கள். அனைவரும் கீழே இறங்கிய உடன் திடீரென்று போலீசார் கற்களை வீசியும், லத்தியால் அடித்தும் எங்களை விரட்ட ஆரம்பித்தார்கள். அங்கு நின்று கொண்டிருந்த இரண்டு சக்கர வண்டியை போலீசார் அடித்து நொறுக்கினார்கள். ஐம்பதிற்கும் மேற்பட்ட இருசக்கர வாகனத்தை லாரியில் ஏற்றி தூக்கி சென்றார்கள். பாலத்திற்கு அருகில் உள்ள வீடுகளின் மீதும் கடைகள் மீதும் கற்களை வீசி சரமாரியாக போலீசார் தாக்க ஆரம்பித்தார்கள். போலீசார் தாக்குதலில் சிதறி ஓடிய போராட்டகாரர்களை துரத்தி சென்று போலீசார்

லத்தியால் அடித்தனர். அந்த வெறித்தனமான தாக்குதலில் பல இளைஞர்கள் படுகாயம் அடைந்தனர் என்று கூறினார்.

## 10. செல்வம் என்பவரின் வாக்குமூலம்

எனது மகன் கார்த்திக் (14/17) வீரமாமுனிவர் மேல்நிலை பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வருகிறான்.

கடந்த ஐந்து நாட்களாக ஜல்லிக்கட்டிற்காக நடைபெற்று வந்த போராட்டத்தில் என் மகன் கலந்து கொள்ளவில்லை.சில நேரங்கள் நாங்கள் ஆற்றிற்கு கீழே நின்று வேடிக்கை பார்க்கச் செல்லுவோம். ஐந்து நாட்களும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வந்தனர்.அப்போதெல்லாம் ஒன்றும் செய்யவில்லை. 23/01/2017 மாலை 4.00 மணியளவில் ஆயிரகணக்கான போலீசார் கற்களை வீசி மாணவர்களை தாக்கினர்கள். என் மகன் கார்த்திக் ஆற்றின் ஓரத்தில் நின்று போராட்டத்தை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தான். போராட்டம் நடைபெற்ற பாலத்தில் இருந்து 200 மீட்டர் தொலைவில் இருந்த எங்கள் வீட்டில் சத்தம் கேட்டு நாங்கள் வெளியே சென்று பார்தோம். அப்போது போலீசார் லத்தியால் அடித்தும், கற்களை வீசியும் மாணவர்களை தாக்கி கொண்டிருந்தார்கள். வைகை ஆற்றின் தென்கரையில் பொது கழிப்பறையின் பின்புறம் நின்று கொண்டிருந்த ஒரு மினி வேன் -னை போலீசார் கற்களை வீசி கண்ணாடியை உடைத்தனர். வேடிக்கை பார்க்க சென்ற என மகனை கற்களை வீசியும், லத்தியால் அடித்தும் போலீசார் சரமாரியாக தாக்கியுள்ளனர். போலீசார் தாக்கியத்தில் என் மகனின் வலது கன்னத்தில் கண்ணிற்கு கீழே பலமான இரத்த காயம் ஏற்பட்டுள்ளது. உடனே நான் அருகில் இருந்த தனியார் மருத்துவமனைக்கு என மகனை அழைத்து சென்றேன். மருத்துவர்கள் காயம் பலமாக ஏற்பட்டிருந்ததால் என் மகனின் கன்னத்தில் மூன்று தையல் போட்டுள்ளனர். என் மகனை போல பல பள்ளி குழந்தைகளை போலீசார் இரக்கமின்றி அடித்து விரட்டினார்கள். ஒரு சில மாணவர்களை கைது செய்தும் உள்ளனர் என்று கூறினார்.

### 11. மாரிமணவாளன் அவர்களின் வாக்குமூலம்

மாரிமணவாளன் (35) த/பெ. ராஜன் ஆகிய நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகின்றேன். நான் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகின்றேன். நான் சுப்புரமணியன் டீக்கடையில் நின்று

என் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். திடீரென்று சுமார் பத்து போலீசார்கள் என்னை பலவந்தமாக அடித்து கீழே தள்ளி என்னை சுற்றி வளைத்து அடித்து உதைத்தார்கள். என் கையிலும், முதுகிலும் பலத்த காயத்தை ஏற்படுத்தினார்கள். பிறகு நான் சரவணா மருத்துவமனைக்கு சென்று காயத்திற்குச் சிகிச்சை பெற்றேன். போலீசார்கள் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தாக்காமல் அமைதியாக நின்றுக் கொண்டிருந்தவர்களை தான் குறி வைத்து தாக்கினார்கள் என்றார்.

## 12. திரு.அழகர் 14/17 த/பெ ராமன் அவர்களின் வாக்குமூலம்:

மதுரை மாவட்டம் செல்லூர் பகுதியிலுள்ள விசாலம் ஐயன்சபுரம் 1வது தெருவில் வசித்து வரும் எனது அண்ணனை கடந்த 23.01.2017 அன்று சுமார் 5.30 மணியளவில் எங்க வீட்டு பகுதியில் எல்லோரையும் லத்திக் கம்பைக் கொண்டு விரட்டி விரட்டி போலீஸ்காரர்கள் அடித்து கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியாக வந்த எனது அண்ணனான இளையராஜாவையும் போலீசார் அடித்தனர். இதனால் அவருக்கு இடதுபக்க கழுத்து பகுதி பின்புறத்தில் வீக்கம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக அண்ணனை நாங்கள் தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை செய்தோம் என்றார்.

## 13. திரு. வேலாயுதம் அவர்களின் வாக்குமூலம்:

S.வேலாயுதம் த/பெ. சுந்தரம் (30) ஆகிய நான்,மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த ஐந்து வருடங்களாக பட்டரையில் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகின்றேன்.எங்களுக்கு சொந்த ஊர் மதுரை. செல்லூரில் தான் நான் சிறுவயதில் இருந்து வாழ்ந்து வருகின்றேன்.

கடந்த 5 நாட்களாக செல்லூரில் மாணவர்கள் தமிழகத்தில் சல்லிக்கட்டு தடையை நீக்கக்கோரி போராடினார்கள். நான் ஒரு நாள் கூட போராட்டதில் கலந்து கொள்ளவில்லை.23.01.2017 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் நான் பட்டரையில் வேலை செய்து விட்டு டீ குடிப்பதற்காக சென்ற என்னை போலீசார் மாலை சுமார் 5.30 மணியளவில் பலவந்தமாக என் சட்டையைப் பிடித்து அடித்து, என் மண்டையில் லத்தியால் அடித்தார்கள்.இதனால் நான் நிலை தவறி கீழே விழுந்து விட்டேன். சுமார் பத்து போலீஸ்காரர்கள் என்னை சுற்றி வளைத்து என் கை, கால், இடுப்பு மற்றும் முதுகினில் சரமாரியாக அடித்தார்கள். என் தலையினில் பலத்த

காயம் ஏற்பட்டது. என் கை, கால்கள் எல்லாம் இரத்தம் வடிந்த நிலையிலும் என்னை தாக்கினார்கள். டீக்கடையில் நின்றுக் கொண்டிருந்த என்னை போலீசார்கள் “வெளியே வா, கல்லை ஏன் தூக்கி எறிந்தாய்? என்று கேட்டார்கள். நான் டீ குடிக்கத்தான் வந்தேன். நான் சத்தியமாக எந்த ஒரு கல்லையும் எறியவில்லை என்றுக் கூறியும் விடவில்லை.”

பின்பு என் அண்ணன் வேலுச்சாமி, என்னை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு நான் இரத்தம் வடிந்த நிலையில் இருக்கும் போது வரிசையில் நில்லுங்கள் என்றார்கள் என்னுடன் வந்த என் அண்ணனை வெளியே போகச் சொன்னார்கள்.பிறகு நேரம் தாமதமானதால் என் அண்ணன் (வேலுச்சாமி) நீங்கள் எந்த வித மருத்துவமும் பார்க்கத் தேவையில்லை என்று கூறி என்னை வீட்டின் அருகாமையில் உள்ள **“தக்சச்”** என்னும் மருத்துவமனையில் அனுமதித்து வைத்தியம் பார்த்தார். இரவு சுமார் 9.00 மணியளவில் வீடு திரும்பினோம் என்று கூறினார்.

## 14. **முகிலன்(49) த/பெ தங்கசாமி அவர்களின் வாக்குமூலம்:**

எனது பெயர் சண்முகம்(எ) முகிலன், 43 ஈங்கல் சாலை சென்னிமலை, ஈரோடு மாவட்டத்தை சார்ந்தவன். மக்களின் உரிமைக்காக தமிழகத்தில் நடைபெற்றும் அனைத்து போராட்டங்களிலும் நான் பங்கேற்று வருகின்றேன். மனித உரிமைக் காப்பு பணிகளில் சனநாயக அமைப்புகளோடு இணைந்து பணியாற்றி வருகிறேன்.

தமிழர்களின் கலாச்சர உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்கத்தில் சல்லிக்கட்டு விளையாட்டிற்கான தடையை நீக்க கோரி நடைபெறும் ஆர்பாட்டத்திற்கு ஆதரவு தரும் நோக்கத்தில் 16.01.2017 அன்று 10 அமைப்புகள் இணைந்து மதுரை பாத்திமா கல்லூரி முன்பாக காலை 10.00 மணியளவில் பேரணி தொடங்கி அலங்காநல்லூர் நோக்கி கிளம்பினோம். அலங்காநல்லூர் செல்லும் வழியில் பல்வேறு இடையூறுகள் சிக்கல்களை காவல்துறையினர் கொடுத்தார்கள். அத்தனையும் எதிர்கொண்டு, பின்பகல் 2.30 மணியளவில் அலங்காநல்லூர் சென்றடைந்தோம். பேரணியில் சுமார் 300 தோழர்கள் பங்கேற்பு செய்தனர்,

சனநாயக உரிமையை நிலைநாட்ட உயிர் தியாகமும் செய்யும் நோக்கத்தோடுதான் எங்கள் பயணம் முழுவதும் தோழர்கள் உறுதிபூண்டிருந்தனர். அலங்காநல்லூர் வாடிவாசல் முன்பு

செக்போஸ்ட அமைத்திருந்ததால் உள்ளே செல்ல முடியவில்லை இதனால் செக்போஸ்ட் முன்பாகவே தடையை மீறி ஆர்பாட்டத்தில் ஈடுப்பட்டிருந்தோம். DSP சங்கர் தலைமையில் வாடிப்பட்டி இன்ஸ்பெக்டர் முருகேசன், அலங்காநல்லூர் இன்ஸ்பெக்டர் அன்னராஜ் ஆகியோர் அங்கே இருந்தனர். மேலும் நூற்றுக்கணக்கான போலீசார் புடை சூள எங்களை கைது செய்து வாடிப்பட்டி சிவசாமி ரெட்டியார் விவசாய சங்கம் கட்டிடத்தில் எங்களை அடைத்து வைத்தனர். அதன் பின் மாலை 6.00 மணியளவில் எங்களை போலீசார் விடுதலை செய்தனர். 19.01.2017 அன்று காலை, மதுரையில் தமுக்கத்தில் நடைபெற்று வந்த மாணவர் போராட்டத்தில் பேசிவிட்டு மதிய நேரத்தில் அலங்காநல்லூர் வந்துவிட்டேன். 22.01.2017 அன்று மாலை நேரம்வரை போராட்டம் அறவழியிலே நடைபெற்றது.  மாணவர்கள் பொது மக்கள் என 5000 க்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் பங்கேற்பு செய்திருந்தனர்.

22.01.2017 அன்று இரவு அ.இ.அ.தி.மு.க முக்கியபிரமுகர்கள் சிலர் போலீசாரல் மிரட்டப்பட்டார்கள். மேலும் அ.இ.அ.தி.மு.க விடம் ஓ.பன்னீர்செல்வம் என்பவரை முதல்வர் பதவியில் இருந்து எடுப்பதற்காக எதிர்கட்சியினர் திட்டமிடுகிறார்கள் என்ற லாபியும் நடைபெற்றது. இதனால் அலங்காநல்லூரில் ஒரு சின்ன சலசலப்பை ஏற்படுத்தினார்கள் ஆனால் உள்ளூர் மக்களில் மிக பெரும்பாலானோர் போராட்டத்தில் உறுதியாக பங்கேற்று வந்தனர்.

23.01.2017 அன்று காலையில் மெரீனா பீச்சில் காலை சுமார் 8.00 மணியளவில் லத்தி ஜார்ஜ் செய்யப்பட்ட நேரத்தில் அலங்காநல்லூரில் கிராமம் சில ஆயிரம் போலீசாரால் சுற்றி வளைக்கப்பட்டது. இந்நேரத்தில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சிலர் பயந்த நிலையில் வெளியே போவதும்,  உள்ளே வருவதும் என்ற நிலை இருந்தது, காலை சுமார் 8.30 மணிக்கெல்லாம் போராட்டத்தில் ஈடுப்பட்டிருந்த மாணவர்களையும் பொதுமக்களையும் சுற்றி போலீஸ் நிறுத்தப்பட்டார்கள். போராட்டத்தில் சுமார் 1000 பேர் பங்கேற்று வந்தனர்.

காலை சுமார் 9.00 மணியளவில் அ.இ.அ.தி.மு.க கட்சியினரை வைத்து போராட்டத்தில் இருந்தவர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டார்கள். மேலும் போராட்டத்திலிருந்த சில பெண்களை அவர்களின் கணவன்மார்கள் போராட்டத்தில் இருந்து வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றனர். போராட்ட களத்தில் ஆண்களையெல்லாம் மையப்படுத்தி பெண்கள் சுற்றி கைகோத்து

வளையமாக நின்று கொண்டார்கள். நாம் கைதாகும் போது ஒன்றாக கைதாவோம் நம்மை பிரிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தந்து விடக்கூடாது என அனைவரையும் எச்சரித்தேன்.

போலீசார் போராட்டத்தில் ஈடுப்பட்ட முக்கியமான ஒவ்வொருவரிடமும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்கள். யாரும் சமரசம் ஆகவில்லை இறுதியாக என்னிடம் வந்து போலீஸ் தரப்பில் இருந்து என்னிடம் வந்து பேசினார்கள், அதற்கு நான் கடந்த ஆறு ஆண்டுகாலமாக சல்லிக்கட்டிற்கான தடையை நீக்க மத்திய அரசு, மாநில அரசு எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. அதனால் உங்கள் மீது எவ்வித நம்பிக்கையும் இல்லை என்று எனக் கூறினேன். மேலும் சல்லிக்கட்டு நடத்த நிரந்தர சட்டம் இயற்றும் வரை போராட்டம் தொடரும் என உறுதிபடச் சொன்னேன். மேலும் நிரந்தர சட்டம் கொண்டு வரமுடியவில்லை என்றால் தமிழக முதல் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ராஜினமா செய்வதாக எழுதிதர வேண்டும் என்று கோரினேன்.

கிராமத்தில் முக்கியமான நபர்கள் மற்றும் அ.இ.அ.தி.மு.க ஆட்களையெல்லாம் போலீஸ் வரவழைத்து எங்களோடு பேசவைத்தார்கள். கிராம முக்கிய நபர்கள் வந்து மீண்டும் பேசினார்கள். அப்போது வருகின்ற 1ம் தேதி அலங்காநல்லூரில் சல்லிக்கட்டு நடத்தலாம் என முடிவு செயதுள்ளோம் என்றும் என முடிவு செய்துள்ளோம் என்றும் நடத்துவோம் போராட்டத்தில் ஈடுபட்ட முக்கியமானவர்களுக்கு மேடையில் பங்கேற்க வாய்ப்பு தருகின்றோம் மேலும் பார்வையாளர்களுக்கு அமைக்கப்படும் கேலரியில் இந்த முறை மாணவர்களுக்கு இளைஞர்களுக்கு தனி கேலரி ஒதுக்குகிறோம் என்றும் கூறினார்கள். அதன்பின் RDO வந்து பேச்சுவார்த்தை நடத்தினார். இறுதியில் போலீசார் நீங்கள் கூடியிறுப்பது சட்ட விரோத கூட்டம் என அறிவித்தனர்.

பல உயர் அதிகாரிகள், என்னிடம் வந்து முகிலன் நீங்கள் வாருங்கள் என கூப்பிட்டனார்கள். நான் எழுந்து செல்லவில்லை. இறுதியாக போலீசார் துப்பாக்கி சூடு நடத்துவதற்கு முன்னால் செய்யக்கூடிய சிவப்பு கலர் பேனர் பிடித்தார்கள். அதன் பின் எங்களை சுற்றி பேரிகாட் வைத்து அடைத்தார்கள். அப்போது நேரம் மதியம் சுமார் 12 மணி இருக்கும், போராட்டத்தில் 600 ஆண்கள் இருந்தார்கள், ஆண்களை சுற்றி 150 பெண்கள் கைகோர்த்து வளையம் அமைத்தனர். இந்நேரத்தில் முகிலன், வினோத், உமா ஆகியோரை தனிமைப்படுத்த போவதாக கூட்டத்தில் உள்ளே இருந்து

தகவல் வந்தது உசாராக இருக்கவேண்டும் என எச்சரித்தார்கள். ஆனாலும் எனக்கு பயமில்லை அதிகபட்சம் உயிர் தானே போகும் அது மக்களுக்காகத் தானே என்று தைரியமாக இருந்தேன்.

பெண்கள் சிலர் கைக்குழந்தையோடு போராட்டத்தில் ஈடுப்பட்டிருந்தனர். பெண்கள் வளையத்தை ஆண் பெண் இரு போலீசாரும் இணைந்தே உடைத்தார்கள் மேற்கு பகுதியிலும் கிழக்கு பகுதியிலும் உள்ள பெண்களை இழுத்து சென்றனர். இந்நேரத்தில் என்னை இழுத்துக் கொண்டு புளிய மரத்திற்கு எதிரே உள்ள காம்ளாக்ஸ்சில் அமர வைத்தார்கள். காலையில் இருந்து சாப்பிடாததால் மயக்கம் ஏற்பட்டு நான் படுத்துவிட்டேன். சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து பார்த்தேன் போலீஸ்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கல் எடுத்து எறிந்து கொண்டிருந்தர்கள். உடனே நான் மக்களை ஏன் கல் எடுத்து அடிக்கீறிங்க இதெல்லாம் அடுக்குமா என்று கேட்டேன். இதனை மப்டியில் இருந்த போலீஸ்காரர்கள் தான் கல் எடுத்து எறிந்து கொண்டு இருந்தார்கள்.

அலங்காநல்லூருக்கு வரும் 9 வழித்தடங்களும் முழுமையாக போலீஸ் கட்டுப்பாட்டில் வந்த நிலையில், போலீசுக்கு குவியல் குவியலாக கல் எங்கிருந்து வந்தது இது கண்டிப்பாக விவாதிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

கலவரத்தின் காரணமாக நான் இருந்த இடத்தில் எவ்வித நடமாட்டமும் இல்லை, என்னை மீண்டும் போலீசார் கூப்பிட்டுக் கொண்டு போனார்கள். அப்போது புதிய தலைமுறை ரிப்போர்டர் இராமானுஜம், நக்கீரன் ரிப்போர்டர் அன்வர் ஆகியோர் என்னை பார்த்தார்கள், மேலும் நிறைய பத்திரிக்கையாளர்கள் அங்கே இருந்தார்கள் அவர்களை பார்த்து நீங்கள் தான் சாட்சி என சொல்லிக் கொண்டு சென்றேன்.

பத்திரிக்கையாளர்களின் நேரடி ஒளிப்பரப்பு செய்யும் வண்டியை தாண்டி வாய்க்கால் பாலம் கடந்து புதியாலம் அருகாமையில் சென்றவுடன் அவ்விடத்தில் தற்காப்பு உடைகள் அணிந்த 30 போலீசார் இருந்தார்கள். அவர்களின் மத்தியில் என்னை நிற்க வைத்து விட்டு அலங்காநல்லூர் காவல் ஆய்வாளர் அன்னராஜ் என்னிடம் வந்து இனிமேல் நீ மதுரை பக்கமே வரக்கூடாது. உன்னால் தான் அலங்காநல்லூரே கெட்டுப்போனது எனக்கூறி தனது கையில் லத்தியால் பலம் கொண்டவரை என் தலையில் அடித்தார். அப்போது எனது இரண்டு கைகளால் தலையை மூடிக்கொண்டேன், இதனால் எனது இடது கை மணிக்கட்டுக்கு கீழே அடிவிழுந்தது. மேலும் வலது

கையில் முட்டிக்கு மேலையும், கீழேயும் லத்தியால் அடித்தார். இடது கை கட்டவிரல் மீது அடிவிழுந்தது. அடிச்சதெல்லாம் இன்ஸ்பெக்டர் அன்னராஜ் மட்டும் தான் பன்னீர் செல்வத்திற்கு எதிராகவே தொடர்ந்து போராடுகிறாய் எனக் கூறி வலது முழங்காலுக்கு முன்பக்கம், இடது முழங்காலுக்கு முன்பக்கம் கழுத்துக்கு கிழே பின்பக்க முதுகில் மட்டும் சுமார் 10 அடிகளுக்கு மேல் லத்திக் கம்பால் அடித்தார்.

சுமார் 20 நிமிடங்கள் வரை தனது பலம் கொண்ட மட்டும் இன்ஸ்பெக்டர் என்னை லத்தியால் அடித்தார். இதனால் நான் மயக்கநிலைக்கு செல்லும் போது அங்கு வந்த உயர் அதிகாரிகள் முகிலனை அடிக்காதீர்கள் என சொன்னார். இதனால் என்னை அடிப்பதை இன்ஸ்பெக்டர் நிறுத்திவிட்டார். அதன்பின் என்னை போலீஸ் வாகனத்தில் ஏற்றினார்கள், சுமார் 1/2 மணி நேரத்தில் 6 நபர்களை ஏற்றினார்கள். அதில் இரண்டு நபர்கள் போராட்டத்தில் பங்கேற்பு செய்தவர்கள், மற்றவர்கள் பொதுமக்கள், எங்களை வாடிப்பட்டி இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைத்தார்கள் வாடிப்பட்டி இன்ஸ்பெக்டர் தனி ஜீப்பிலும், நான் இருந்த வண்டியில் எஸ்.ஐ மற்றும் 4 காவலர்கள் இருந்தார்கள் இவர்களின் பெயர் தெரியாது ஆனால் பார்த்தால் அடையாளம் தெரியும், போலீஸ் வண்டி வாடிப்பட்டி போலீஸ் ஸ்டேசன் சென்றது, போகும் போது நான் எஸ்.ஐ யிடம் சார் கைது செய்யப்பட்டுள்ள என்னை DK பாசு தீர்ப்பின்படி என் குடும்பத்திற்கு தகவல் சொல்லி வீட்டீர்களா என்று கேட்டேன். அப்போது அவர் DK பாஸ் பற்றி கேட்டால் உனக்கு வேறதான் கிடைக்கும் என்றார்.

நாங்கள் சென்ற போலீஸ் வண்டி மதியம் சுமார் 2.00 மணியளவில் வாடிப்பட்டி போலீஸ்ஸ்டேசன் சென்றது. எங்கள் அனைவருக்கும் சாப்பாடு வாங்கி கொடுத்தார்கள். அதில் 2 பேர் மட்டும் சாப்பிட்டார்கள், மற்ற நபர்கள் சாப்பிட வில்லை.மாலை சுமார் 4.00 மணியளவில் வாடிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு கூப்பிட்டு சென்றார்கள் மருத்துவருக்கு எதிரில் அலங்காநல்லூர் மற்றும் வாடிப்பட்டி இன்ஸ்பெக்டர் இருவரும் இருந்தார்கள். அப்போது டாக்டரிடம் எனக்கு நன்கு தெரிந்த ஆய்வாளர் தான் என்னை கொடுரமாக அடித்து காயப்படுத்தினார் என பதிவு செய்யுங்கள் என்று கூறினேன். டாக்டரும் அப்படியே பதிவு செய்தார்.டாக்டர் எழுதிய மருத்துவ குறிப்பில் நேரத்தினை பதிவு செய்து நான் கையொப்பமிட்டேன்.

மாலை சுமார் 6.00 மணிக்கு ஸ்டேசன் கூப்பிட்டு வந்தார்கள். மீண்டும் அரசு மருத்துவமனைக்கு கூப்பிட்டு வந்தார்கள். அதன்பின் நிலக்கோட்டையை சார்ந்த 108 ஆம்புலன்சில்

என்னையும் சேர்த்து 4 நபர்களை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள், நானும் மருத்துவமனையில் சீட்டு பதியக்கூடிய இடத்திற்கு போகும் போது மப்டியில், வாடிப்பட்டி ஏட்டு எதிரே வந்து உங்களை எஸ்.ஐ பாக்கணும் என்று கூப்பிட்டார் என்றார் நானும் சென்றேன். மருத்துவமனை வாசலில் வண்டியில் எஸ்.ஐ இருந்தார். நான் போனவுடன் வண்டியினுள் ஏறச்சொன்னார். நான் ஏறியவுன் உங்கள் வீட்டு முகவரியை சரியாக கொடுத்து உள்ளீர்களா என்று கேட்டார். அப்போது நான் இதுவரை என் மீது 500க்கு மேற்பட்ட வழக்குகள் உள்ளது. அதிலெல்லாம் இதே முகவரியைத்தான் கொடுத்துள்ளேன் என்று 20 கூறினேன். உடனே எஸ்.ஐ என்னிடம் நீங்கள் தான் கூடங்குளத்தில் அனுஉலைக்கு எதிராக போராடிய முகிலனா என்று கேட்டார். நானும் ஆமாம் என்றேன். அதற்கு அவர் நீங்கள் முதலிலே சொல்லி இருக்கலாம் அல்லவா என்று கேட்டார். நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

அதன்பின் எஸ்.ஐ ஊமச்சிகுளம் ஸ்டேசன்வரை போய்வரலாம்.அங்கு தான் உங்கள் செல்போன் உள்ளது வாங்கிவிட்டு வந்து விடலாம் எனக் கூறினார். நானும் சரியென்றேன் உடனே போலீஸ் வண்டி கிளம்பியது. அண்ணா பஸ் ஸடாண்ட் அமைந்துள்ள பூமாலை வணிக வளாகம் வரை சென்றது ஒரு 15 நிமிடம் கழித்து மீண்டும் அரசு மருத்துவமனையில் என்னை இறக்கி விட்டுச் சென்றார்கள். நான் 99வது வார்டில் சிகிச்சை பெற்றேன் என்று கூறினார்.

## கண்டறிந்தவைகள்

1. மதுரை செல்லூர் இரயில் மேம்பாலத்தில் வந்த கோவை-நாகர்கோவில் விரைவு ரயிலை சல்லிக்கட்டு அறவழிப் போராட்டக்குழுவினர் கடந்த 19.01.2017 முதல் மறித்து தடுத்துள்ளனர் என்பதை தன குருவம்மா என்பவரது வாக்குமூலம் வழியாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் கண்டறிய முடிகிறது.
2. செல்லூர் இரயில்வே மேம்பாலத்தில் அறவழியில் போராடிய மாணாக்கர்களுக்கு தேவையான உணவினை செல்லூர் பகுதி மக்களே தங்கள் வீடுகளில் சமைத்து கொடுத்து அவர்களுக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்துள்ளனர் என்பதை சித்ரா என்பவரது வாக்குமூலத்தின் வாயிலாக கண்டறிய முடிகிறது.
3. மதுரை, செல்லூர் இரயில் மேம்பாலத்தில் அறவழியில் போராடி வந்த மாணவர்களை 23.01.2017 அன்று காவல்துறையினர் அப்புறப்படுத்த முயன்றுள்ளனர் என்றும் செல்லூர்

மேலதோப்பு, கீழதோப்பு பகுதியில் உள்ள முக்கியஸ்தர்களை கொண்ட குழுவை அனுப்பி போராடும் மாணவர்களை சமாதானப்படுத்தி பெரும்பாலானோரை பாலத்தில் இருந்து கீழே இறங்க வைத்துள்ளனர் என்பதை சமாதானக்குழுவில் இடம் பெற்ற இந்திராகாந்தி அவர்களின் வாக்குமூலம் வாயிலாக கண்டறிய முடிகிறது.

4. பாலத்தில் இருந்து கீழே இறக்கப்பட்ட மக்கள் மீது செல்லூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு மோகன் அவர்கள் இரயில் தண்டவாளத்தில் இருந்து கருங்கற்களை எடுத்து முதலில் வீசி தாக்கினார் என்றும் அதனைத் தொடர்ந்து மற்ற காவலர்களும் கற்கலாலும் லத்தியால் தடியடி நடத்தியும் மிகக் கொடூரமாக தாக்கியுள்ளனர் என்பதை சித்ரா அவர்களின் வாக்குமூலம் வாயிலாக கண்டறிய முடிகிறது.
5. மதுரை வீரமாமுனிவர் மேல்நிலைப்பள்ளியில் 6வது வகுப்பு படித்து வரும் பாண்டி த/பெ. கார்த்திக் என்பவர் செல்லூர் வைகையாற்றில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த போது காவலர்கள் சுற்றி வளைத்து மிகக் கொடூரமாக தாக்கியுள்ளனர் என்றும் இதனால் இவருக்கு இடுப்பு பகுதியல் இரத்தக் காயம் ஏற்பட்டுள்ளது என்பதையும் பாண்டி வாக்குமூலத்திலிருந்து கண்டறியமுடிகிறது.
6. காவல்துறை போராட்டக்காரர்களை தாக்குவதற்கு முன்பு செல்லூர்-தத்தனேரி மேம்பாலம், பாலம் ஸ்டேசன் சாலை, செல்லூர் மேலதோப்பு, கீழதோப்பு ஆகிய பகுதிகளில் நின்று கொண்டிருந்த பொது மக்கள் அனைவரையும் காவல்துறையினர் ஓட ஓட விரட்டி நடக்கப் போகும் தாக்குதலை யாரும் பார்த்திடாதவகையில் நடத்துள்ளனர் என்பதை சித்ரா மற்றும் குருவம்மா, இந்திரா, சண்முகம் அவர்கள் வாக்குமூலம் வாயிலாக கண்டறிய முடிகிறது.
7. 11வது வகுப்பு படித்து வரும் வீரபாண்டி த/பெ. வீரன்னண் என்பவரை 10க்கும் மேற்பட்ட காவல்துறையினர் கும்பலாக லத்தியால் தாக்கியதில் அவரது இடது கையில் எலும்புமுறிவும் உடல் பகுதியில் வீக்க காயமும் உள்ளதாக செல்லூர் மேலதோப்பு பகுதியில் வசித்தது வரும் சித்ரா க/பெ. தங்கராசு வாக்குமூலத்தில் இருந்து அறிய முடிகிறது.
8. செல்லூர் மேலத்தோப்பு, கீழத்தோப்பு பகுதிகளில் உள்ள வீடுகளில் காவல்துறை கல்வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றும் அப்பகுதியில் இருந்த பெண்களை ‘‘தேவடியா’’ ‘‘அவுசாரி’’ என்கிற இழிவான சொற்களால் திட்டி தெருக்களில் நின்றிருந்த இருசக்கர

வாகனம் உள்ளிட்ட பொருட்களை லத்தியால் கடுமையாக தாக்கிக் கொண்டே சென்றுள்ளனர் என்பதை சித்ரா, சண்முகம் வாக்குமூலத்தில் இருந்து கண்டறிய முடிகிறது.

9. மதுரை வைகையாற்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருசக்கர வாகனங்களை தடியடி சம்பவம் நடந்தபோது வெள்ளைநிற காவல்துறை லாரியில் மூன்று முறை காவல்துறையினர் தூக்கிச் சென்றார்கள் என்பதை இந்திராகாந்தி, சண்முகம் வாக்குமூலம் வாயிலாக கண்டறிய முடிகிறது.

10. காவலர்களால் தாக்குதலுக்குள்ளான பலர் உயிருக்கு பயந்து அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிக்சை மேற்கொள்ளாமல் அப்பகுதியில் உள்ள தனியார் மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பதை வேலாயுதம் என்வரின் வாக்குமூலத்தில் இருந்து அறியமுடிகிறது.

11. செல்லூர் பகுதியில் நடந்த ரயில் மறிப்பு அமைதிப் போராட்டம் 19.1.2017 முதல் நடந்ததில் இருந்து போராட்டக்காரர்கள் எவ்வித வன்முறைச் செயல்களிலும் ஈடுபடாமல் அமைதியான வழிமுறையில் கடுமையான வெயிலையும் குளிரையும் பொருட்படுத்தாமல் தங்களை வறுத்தி சல்லிக்கட்டுக்கு நிரந்தர சட்டம் வேண்டும் என்பதற்காக அறவழியில் போராடினார்கள் என்பதை செல்லூர் பகுதிவாழ் பொதுமக்களிடம் மக்கள் கண்காணிப்பகத்தின் உண்மையறியும் குழுவினர் நேரில் தெரிவித்ததன் வாயிலாக கண்டறிய முடிகிறது.

12. அறவழியில் போராடும் மாணவிகள், பொதுமக்கள் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும் என்ற திட்டமிடுதலோடு தான் காவல்துறையினர் செல்லூர் பகுதியில் பெருமளவில் குவிக்கப்பட்டனர் என்பதை பொதுமக்களோடு உண்மையறியும் குழுவினர் பேசியதில் இருந்து அறிய முடிகிறது.

13. சட்டத்திற்கு புறம்பாக பலரை செல்லூர் காவல் துறையினர் கைது செய்து மதுரையில் உள்ள பல காவல் நிலையங்களில் வைத்துள்ளதாகவும் CRPC 41 பிரிவு A,B,Cயின்படி உரிய வழிமுறைகளை காவல்துறை பின்பற்றவில்லை என்பதை அறியமுடிகிறது.

14. அலங்காநல்லூரில் போராடிவந்த மாணவர்கள், பெண்கள் மீது போலீசார் கொடூர தாக்குதல் செய்துள்ளனர். மேலும் சமூக ஆர்வளார், முகிலன் என்பவரை போராட்டகாரர்களிடமிருந்து தனிமை படுத்தி, அலங்காநல்லூர் காவல் ஆய்வாளர் அன்னராஜ் என்பவர் கொடூர தாக்குதல் செய்துள்ளார். இதனால் காயமடைந்த முகிலன் என்பவருக்கு உடனடி

மருத்துவசிகிச்சை கொடுக்காமல் அலைக்கழிப்பு செய்துள்ளனர் என்பதை முகிலன் வாக்குமூலத்தில் இருந்து அறிய முடிகின்றது.

## பரிந்துரைகள்:

1. அறவழியில் போராடிவந்த மாணவர்கள் மீது கொடூர தாக்குதல் நடத்திய காவல்துறையை வன்மையாக கள மக்கள் கண்காணிப்பகம் கண்டிக்கிறது. மேலும் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய மற்றும் தாக்குதலில் ஈடுபட்ட காவலர்கள் மீது உடனடியாக வழக்கு பதிவு செய்து கைது செய்யப்பட வேண்டும் என கோருகின்றோம்.
2. காவல்துறையினர் நடத்திய தாக்குதலில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களோடு பங்கேற்பு செய்யாத பொதுமக்கள், குழந்தைகள் என பலதரப்பினர் காயமடைந்துள்ளனர். சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட காயமடைந்துள்ள பொதுமக்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை மறுக்கப்படுகிறது. இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான காயப்பட்டவர்களுக்கு போதிய உயர்தர மருத்துவ சிகிச்சை அளித்து, அவர்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டுமென கோருகின்றோம்.
3. அறவழியில் போராடிய மாணவர்கள் மீதும் மற்றும் பொதுமக்கள் மீதும் 23.01.2017 அன்று காவல்துறையினரால் நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் அத்துமீறல்களை விசாரணை செய்திட பணியில் உள்ள உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும்.
4. போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் சட்ட விரோதமாக கைது செய்யப்பட்டுள்ள அனைவரையும் எவ்வித நிபந்தனையும் இன்றி உடனடியாக விடுவிக்க வேண்டும் என கோருகின்றோம்.
5. போராட்டத்தில் ஈடுபட்டுவந்தார்கள் என்ற காரணத்திற்காக சட்டவிரோதமாக இரவு நேரங்களில், மாணவர்கள், பெண்களை கைது செய்வதனை உடனே காவல்துறை நிறுத்த வேண்டும் என கோருகின்றோம்.
6. குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 41 (ர)- ன் படி கைது செய்யப்பட்டவர்கள், பெயர் விபரத்தினை காவல்துறை கட்டுப்பாட்டு அறைப்பிரிவில் பதிவு செய்யப்பட வேண்டும். ஆனால்

சல்லிக்கட்டு போராட்டத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் விபரம் ஏதும் இதுவரை காவல்துறை கட்டுப்பாட்டு அறைபிரிவில் பதிவுச் செய்யப்படவில்லை. எனவே உடனடியாக தமிழக முழுவதும் கைது செய்யப்பட்டவர் விபரத்தினை வெளியிட வேண்டும் என கோருகின்றோம்.

7. அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொதுமக்கள் ஆகியோரின் இருசக்கர வாகனத்தினை காவல் துறையினர் தனது காவல் லாரியில் மூன்று முறை எடுத்துச் சென்றுள்ளனர். அவற்றை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என கோருகின்றோம்.

8. காவல்துறையினரால் கொடூரமாக தாக்கப்பட மனித உரிமைக் காப்பாளர் திரு. முகிலனுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சையும் இவரை கொடூரமாக மனிதாபிமானமற்ற முறையில் தாக்கிய காவல் ஆய்வாளா அன்னராஜ் அவர்கள் மீதும் உடனிருந்த காவலர்கள் மீதும் உடனடியாக குற்றலழக்கு பதிவு செய்து பணி இடை நீக்கம் செய்யப்பட வேண்டும்.

9. டி.கே பாசு எதிர் மேற்கு வங்க அரசு வக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய உத்திரவின் படி ஒரு நபர் கைது செய்யப்படும் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை தமிழக காவல்துறை தொடர்ந்து மிறி வருகின்றது. இந்த உச்சநீதிமன்ற தீர்ப்பான நடைமுறைப்படுத்த வேண்டும்.